ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 10/2024 | LW– 5 | PW– 4 |
| Name | : முத்தழகு (கண்ணுற்ற சாட்சி) | | |
| Father's/Husband's Name | : முருகேசன் | | |
| Village | : ஒடுகம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 41/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12:55 P.M. - 1:09 P.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரி பொன்னுச்சாமியை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் அழகு மனைவி சின்னப்பொண்ணு என்பவரின் மகனான மன நிலை பாதிக்கப்பட்ட சுவாமிநாதன் என்பவரை காணவில்லை என்று சொன்னதன் பேரில் என் பிள்ளைகள், என் நாத்தனார் மற்றும் மச்சான் பிள்ளைகள் ஆகியோர் சேர்ந்து கோட்டையூர் பக்கம் ஆண்டிபுரம் மலைக்கோட்டையில் இருந்து அழைத்து வந்திருந்தனர். பின்னர் 2 நாட்கள் கழித்து என் நாத்தனார் வெள்ளைத்தாயின் மகன் முத்துகிருஷ்ணன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. அவரை மருத்துவமனை சென்று அழைத்து வந்திருந்தார்கள். எனவே அவரை பார்ப்பதற்காக நாங்கள்

வெள்ளைத்தாயின் வீட்டிற்கு சென்றிருந்தோம். அப்போது இரவு சுமார் 10.30 மணியளவில் பொன்னுச்சாமி என்பவர் என் மைத்துனர் பிள்ளையான சுவாமிநாதனை நீங்கள் எதற்காகடா கூட்டி வந்தீர்கள் என்று எங்கள் பிள்ளைகளை பார்த்து கோத்தா, கொம்மா என்று அசிங்க அசிங்கமாக பேசினார்.

2. அதற்கு எங்கள் பிள்ளைகள் நாங்கள்தானே சுவாமிநாதனை கூட்டி வந்தோம் மாமா, எங்கள் அம்மாவை எதற்காக பேசுகிறீர்கள் என்று எதிரியிடம் கேட்டதற்கு எதிரி, எங்களுக்கும், அவர்களுக்கும் ஏற்கனவே பைப் பிரச்சனை உள்ளது, நீங்கள் ஏன் கூட்டிக் கொண்டு வந்தீர்கள் என்று சத்தம் போட்டார். அப்போது அவர் நல்ல போதையில் இருந்தார். அப்போது எனது மச்சான் மகன் சந்தனபாபு என்பவரை எதிரி வைத்திருந்த கத்தியால் இடது பக்க வயிற்றில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அதை தடுக்க சென்ற என் மகன் பிரேம்குமாரை முழங்கையில் கத்தியால் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அப்போது அவரை தடுப்பதற்காக என் நாத்தனார் வெள்ளைத்தாயின் மகன் முத்துக்கிருஷ்ணன் சென்றபோது, அவரை கத்தியால் நெஞ்சில் குத்திவிட்டார். 3 பேரையும் கத்தியால் குத்தியதை பார்த்த எதிரியின் மனைவி அடைக்கம்மாள் தடுக்க சென்றபோது நீ என்னடி வருகிறாய் என்று சொல்லி, அடைக்கம்மாளையும் வயிற்றில் குத்திவிட்டதாக கேள்விப்பட்டேன். ஆனால் அடைக்கம்மாளை குத்தியதை மட்டும் நான் பார்க்கவில்லை.

3. அப்போது அக்கம் பக்கம் இருந்த அனைவரும் விலக்க வந்தபோது எதிரி கத்தியைக் காட்டி யார் வந்தாலும் இப்படிதான் குத்துவேன் என்று மிரட்டிக் கொண்டிருந்தார். பின்னர் எல்லோரும் சேர்ந்து வருவதைப் பார்த்து எதிரி ஓடிவிட்டார். பின்னர் நாங்கள் அருகில் இருந்தவர்கள் உதவியுடன் காயம்பட்ட எங்கள் பிள்ளைகளை நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு

மருத்துவமனை கொண்டு சென்றோம். அங்கு முத்துக்கிருஷ்ணன் 20 நாட்களும், பிரேம்குமார் 15 நாட்களும், சந்தனபாபு 10 நாட்களும் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். சம்பவத்திற்கு மறுநாள் என் வீட்டிற்கு வந்து போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.02.12 16:06:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 10/2024 | LW– 6 | PW– 5 | |
| Name | : சந்தனபாபு (காயம்பட்ட சாட்சி) | | |
| Father's/Husband's Name | : குமார் | | |
| Village | : ஒடுகம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 24/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 1:10 P.M. - 1:20

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அம்மா. எதிரி பொன்னுச்சாமியை தெரியும். கடந்த 18.05.2023 ம் தேதி எங்கள் ஊரைச் சேர்ந்த சின்னப்பொண்ணு மகன் சுவாமிநாதனை காணவில்லை என்று சொன்னதன் பேரில் நாங்கள் 4, 5 நபர்கள் ஆண்டிபுரம் பக்கத்தில் உள்ள மலையில் தேடி கண்டுபிடித்து அழைத்து வந்து அவரது அம்மாவிடம் ஒப்படைத்தோம். அதன் பின்னர் 20.05.2023 ம் தேதி முத்துக்கிருஷ்ணன் என்பவரை காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்திருந்தபோது பார்க்க சென்றிருந்தோம். அப்போது இரவு சுமார் 10.30 மணியளவில் பக்கத்து வீட்டில் வசிக்கும் பொன்னுச்சாமி என்பவர் மது போதையில் கோத்தா, கொம்மா என்று

தகாத வார்த்தைகளில் என்னைப் பார்த்து பேசினார். எதற்காக என் மச்சான் மகனை நீங்கள் கூட்டிக் கொண்டு வந்தீர்கள் என்று கேட்டவரிடம், நான் ஏன் மாமா இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து இடது பக்க விலாவின் முடிவில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். (சாட்சி தனது காயத்தில் ஏற்பட்ட தழும்பை காண்பித்தார்.)

2. எதிரி பயன்படுத்திய கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் எதிரி என்னை தாக்கினார். ( **இளஞ்சிவப்பு கலர் பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய 18 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அப்போது பிரேம்குமார் என்பவர் எனது ரத்தக் காயத்தை பார்த்து என் பின்னால் ஓடி வந்த அவரது இடது முழங்கையிலும் எதிரி கத்தியால் குத்தி காயப்படுத்தினார். அப்போது அங்கு நாங்கள் பார்ப்பதற்காக சென்றிருந்த முத்துக்கிருஷ்ணன் என்பவரும் அங்கு வரவே அவரையும் நெஞ்சில் எதிரி கத்தியால் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். பின்னர் எங்கள் மூவரையும் ரத்தக் காயப்படுத்தியதைப் பார்த்த எதிரியின் மனைவி அடைக்கம்மாள் என்பவர் தடுக்க வரவே அவரையும் எதிரி கத்தியால் வயிற்றில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அக்கம் பக்கத்தில் இருந்த விலக்க வந்தவர்களையும் பார்த்து பக்கத்தில் வந்தால் கத்தியால் குத்தி விடுவேன் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்.

3. ரோட்டில் சென்ற இருசக்கர வாகனங்களை நிறுத்தி அதில் ஏறி நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். பின்னர் அங்கிருந்து காயம் பெரியதாக இருந்ததால் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் சுமார் 15, 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,
Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.02.12 16:06:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 10/2024 | LW– 7 | PW– 6 |
| Name | : பிரேம்குமார் (காயம்பட்ட சாட்சி) | | |
| Father's/Husband's Name | : முருகேசன் | | |
| Village | : ஒடுகம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 24/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 2:40 P.M. - 2:47 P.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பணம் கொடுக்கல் – வாங்கல் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரி பொன்னுச்சாமியை தெரியும். கடந்த 18.05.2023 ம் தேதி எங்கள் ஊரைச் சேர்ந்த சின்னப்பொண்ணு மகன் சுவாமிநாதன் என்பவரை ஆண்டிபுரத்தில் உள்ள மலைப் பகுதியில் இருந்து நானும், என்னுடன் இருந்த நண்பர்களும் சேர்ந்து அழைத்து வந்து அவரது அம்மாவிடம் ஒப்படைத்தோம். முத்துக்கிருஷ்ணன் என்பவர் காவலர் பயிற்சிக்கு சென்றிருந்தபோது, காலில் அடிபட்டு சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்திருந்த அவரை பார்க்க சென்றிருந்தோம். அப்போது பொன்னுச்சாமி என்பவர் அவருக்கும், சின்னப்பொண்ணு என்பவருக்கும் இருந்த பைப் சம்பந்தமான முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு என் மச்சான் மகனை நீங்கள்

எப்படியடா கூட்டிக் கொண்டு வந்துவிடலாம், கோத்தா, கொம்மா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்.

2. நாங்கள்தான் அந்த பையனை கூட்டிக் கொண்டு வந்தோம், ஏன் மாமா திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு, கையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சந்தனபாபுவின் இடது பக்க விலாவில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அதன்பிறகு அதை தடுக்க சென்ற என்னையும் எனது இடது முழங்கையில் பொன்னுச்சாமி கத்தியால் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். (சாட்சி தன் இடது முழங்கையில் இருந்த காயத்தழும்பை காண்பித்தார்.) பின்னர் என்னைக் குத்தியதை பார்த்து தடுக்க வந்த முத்துக் கிருஷ்ணன் என்பவரையும் எதிரி கத்தியால் வயிற்றில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். பின்னர் தடுக்க வந்த அவரது மனைவியையும் வயிற்றில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அக்கம் பக்கத்தினர் விலக்கிவிட வந்தபோது நீங்கள் வந்தால் உங்களையும் குத்திவிடுவேன் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பித்து ஓடிவிட்டார். பின்னர் நாங்கள் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று நான் சுமார் ஒரு மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

3. எதிரி பயன்படுத்திய கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் எதிரி என்னை தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.02.12 16:06:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 10/2024 | LW– 8 | PW– 7 |

| | |
|---|---|
| Name | : முத்துக்கிருஷ்ணன் (காயம்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : அழகர் |
| Village | : ஒடுகம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 22/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 2:48 P.M. - 2:55 P.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கோயம்புத்தூரில் உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரி பொன்னுச்சாமியை தெரியும். கடந்த 18.05.2023 ம் தேதி எங்கள் ஊரைச் சேர்ந்த சின்னப்பொண்ணு மகன் சுவாமிநாதன் என்பவரை காணவில்லை என்று எங்கள் ஊர் பையன்களிடம் சின்னப்பொண்ணு என்பவர் சொன்னதன் பேரில், எங்கள் ஊரைச் சேர்ந்த பையன்களான சந்தனபாபு, பிரேம்குமார் ஆகியோர் சேர்ந்து சுவாமிநாதனை அழைத்து வந்து அவரது அம்மாவிடம் ஒப்படைத்தனர். அதன்பிறகு நான் காவலர் பயிற்சிக்கு சென்றிருந்தபோது, காலில் அடிபட்டு சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்திருந்த என்னை சந்தனபாபு, பிரேம்குமார், அவரது அம்மா ஆகியோர் என்னை பார்க்க வந்திருந்தார்கள். அப்போது

பொன்னுச்சாமி என்பவர் போதையில் கெட்ட வார்த்தையால் திட்டிக் கொண்டிருந்தார். அவருக்கும், சின்னப்பொண்ணு என்பவருக்கும் இருந்த பைப் சம்பந்தமான முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு என் மச்சான் மகனை நீங்கள் எப்படியடா கூட்டிக் கொண்டு வரலாம், கோத்தா, கொம்மா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்.

2. நாங்கள்தான் அந்த பையனை கூட்டிக் கொண்டு வந்தோம் என்று சந்தனபாபு கேட்டதற்கு, பொன்னுச்சாமி கையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சந்தனபாபுவின் இடது பக்க விலாவில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அதன்பிறகு அதை தடுக்க சென்ற பிரேம்குமாரையும் அவரது இடது முழங்கையில் பொன்னுச்சாமி கத்தியால் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். பின்னர் நான் தடுக்க சென்றபோது, எதிரி என்னையும் நெஞ்சில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். (சாட்சி தன் நெஞ்சு முதல் வயிறு வரையிலான காயத்தின் தழும்பைக் காண்பித்தார்.) பின்னர் தடுக்க வந்த அவரது மனைவி அடைக்கம்மாளையும் வயிற்றில் குத்தி ரத்தக் காயப்படுத்தினார். அக்கம் பக்கத்தினர் விலக்கிவிட வந்தபோது நீங்கள் வந்தால் உங்களையும் குத்திவிடுவேன் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பித்து ஓடிவிட்டார். பின்னர் நாங்கள் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று நான் சுமார் ஒரு மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

3. எதிரி பயன்படுத்திய கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் எதிரி என்னை தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.02.12 16:06:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்